1993 மார்ச் 31]

ஆண்டில் போட்டு விடமுடியாது, இன்றைக்கு ஐந்து ஆண்டு களுக்கு திட்டங்கள் எடுத்து, சாலை பராமரிப்புக்காகப் புரட்சித் தலைவி அவர்கள் நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள். மோசம் அடைந்த சாலைகளை மேம்படுத்துவதற்காக திட்டம் —— அதாவது, Bad Structure,—

என்று சொல்லப்படுகிற சாலைகளைப் போடுகிற திட்டம்— அதன் அடிப்படையிலே தான் இன்றைக்கு பல்வேறு பணிகள் தமிழகம் முழுவதும் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை அனைத்து சட்ட மன்ற உறுப்பினர்களும் நன்கு அறிவர். எல்லாத் தொகுதிகளிலும் ஓரளவுக்கு முடிந்த அளவுக்கு சாலைகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். 5 ஆண்டு காலத் திட்டம் வைத்திருக்கிறார்கள். ஆகவே வருகிற ஆண்டுகளில் இது மாதிரி சாலைகளை எடுத்துக் கொண்டு உடனடியாக நடவடிக்கை மேற் கொள்ளப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஆண்டு அந்த சாலைக்கு பணிகளை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 189, திரு ஏ. ரவிக்குமார் இருக்கையில் இல்லை, திருமதி பி. நிர்மலா, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்

189—

பொன்னேரி தொகுதி நாப்பாளையத்தில் குசஸ்தலை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் பணி.

*11526—திரு. ஏ. ரவிக்குமார் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப் பாரா :—

(அ) பொன்னேரி தொகுதியில் நாப்பாளையத்தில் குசஸ் தலை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் பணி பாதியிலே நிற்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அப்பணியைத் துவக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) குசஸ்தலை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டும் மீதமுள்ள வேலைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்

பட்டு இப்பணிகள் தமிழ்நாடு மாநிலக் கட்டுமானக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பணிகள் அனைத்தும் விரைவாக நடைபெற்று வருகின்றன.

திருமதி பி. நிர்மலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கணவர் திரு. ரவிக்குமார் அவர்களின் தொகுதியில், குறையாக நின்று கொண்டிருக்கும் இந்தப் பாலம் எங்களது இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்தில், நிறைவுபெறும் என்பதை, அமைச்சர் அவர்களின் வாயிலாக அறிவித்ததற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், என் கணவரின் சார்பாக.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 190, திருமதி செ. சுந்தராம்பாள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை, அமைச்சர்.

190—

மேட்டூர் தொகுதியிலுள்ள ஊர்களுக்கு ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்கல்.

*9064—திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மேட்டூர் தொகுதியில் நங்கவள்ளி, ஜலகண்டாபுரம், வனவாசிப் பகுதியில் குடிநீர் தட்டுப்பாடு நீண்டகாலமாக உள்ளதால் ஆத்தூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் இணைப்பு வழங்கி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும் ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மேட்டூர் தொகுதியில் நங்கவள்ளி, ஜலகண்டாபுரம், வனவாசி பகுதிகளுக்கு மேட்டூருக்கு அருகில் காவிரி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம் தற்பொழுது நிதிநிலைமை சரியில்லாததால் 1993-ம் ஆண்டு வரையில் தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10-40

திருமதி செ. சுந்தராம்பாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் தொகுதியைச் சார்ந்த நங்கவள்ளி ஜலகண்டாபுரம், வனவாசிப் பகுதியில் உள்ள பொதுமக்கள் குடிநீர் தட்டுப்பாடு காரணமாக மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.